முருகப்பெருமான் துணை

**மகான் உருத்திரபசுபதி நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

16.04.2021, வெள்ளிக்கிழமை

1. அவதார ஞானியே அரங்கா
அறமாக வந்தநல் தேசிகா
புவனமதில் உன் தருமம் பெருக
புண்ணியலோகம் ஆகுமெனக் கூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
குறையிலா பிலவ தகர் திங்கள்
தெரிவிக்க சூலதிகதி புகர் வாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 3ம் நாள், 16.04.2021 வெள்ளிக்கிழமை)
தேசிகன் கேட்க உருத்திரபசுபதி நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான ஞானவழி காட்டும்
ஞானக்குடில் பிரணவக் குடிலை
நம்பிவரும் மக்கள் வாழ்வில்
4. வாழ்வினில் ஏற்றமும் மாற்றமும்
வரமாகக்  கிட்டி நிலைக்கும்
ஊழ் வெல்லும் சக்தியோடு
உடல்பலம் மனபலம் சகலதும் கூடி
5. கூடியே அரங்கன் ஆசிபட
குவலயம் மாற்றும் ஞானவழி
நாடியே சக்திகள் கூடி
நல்லவை ஆற்றும் ஞானவான்கள் ஆகி
6. ஆகியே சிறப்பர் உலகோர்
ஆனந்தகதி தனை அடைவர்
மகிழவே அரங்கன் ஆசிபெற
மனமுவந்து சரணடைவு கொண்டு
7. கொண்டுமே அன்னதான சேவையை
குறைவிலா செய்து நன்கு
தொண்டர்களாகித் தொடர
தேசிகன் அருளுபதேசம் ஏற்க
8. ஏற்கவே வினைகள் விலகும்
இடைகண்டம் சோடை அகலும்
ஏற்புடன் உலகம் எங்கிலும்
ஏழாம்படைவீட்டின் சக்திபரவ
9. பரவவே கலியுகம் மாறும்
பரோபகாரமிக்க ஞான பூமியாக
தரும சேவை வளரவளர
தனிமனித ஞானசக்தி கூடி

10. கூடியே சிறந்த ஆளுமைகள்
குறைவிலா தேர்ந்தெடுக்கும்
திடமான மக்கள் சக்தியாக
தெய்வநிலை எங்கும் நிரம்ப

11. நிரம்ப ஞான ஆட்சி மலரும்
நிலவுலகம் ஞானிகள் துணை
நிரம்ப பாதுகாப்பை பெறும்
நிகழ்த்திய யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—